# தேசியம்

THESIYAM ජාතිකයි

www.thesiyamnews.com



சிறந்ததில் மிகச்சிறந்தது
OFFSET | DIGITAL | SCREEN PRINTING | CTCP PLATE MAKING | WEDDING CARDS
MATHI COLOURS
NO. 10, MURUGESAR LANE, NALLUR, JAFFNA.
TEL : 021 222 9285
E-mail : mathicolours@gmail.com
CUSTOMER CARE
+94 77 722 2259



குரல் - 63 | 22.05.2023 (திங்கட்கிழமை) | வைகாசி மாதம் | பக்கங்கள் 6 | ஊக்குவிப்பு : ரூ.30.00




# தீர்க்கமான முடிவொன்றை எடுத்துக்கொண்டு பேச்சுக்கு வாருங்கள்..!

## ஜனாதிபதியிடம் சம்பந்தன் பகிரங்க கோரிக்கை!



தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வினை காண்பது குறித்து தீர்க்கமான முடிவொன்றை எடுத்துக் கொண்டு பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்குமாறு ஜனாதிபதியிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் பகிரங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

இனப் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க

பக்கம் 5

## தமிழ்த் தேசியக் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணையும்..! மாவை நம்பிக்கை



தமிழ்த் தேசியக் கட்சிகள் அனைத்தும் இணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக செயற்படுவதற்கான தீர்மானம், தமிழரசுக் கட்சியின் பொதுச் சபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்படும் என அக்கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

பக்கம் 5

## விக்னேஸ்வரனுக்கு இன்னும் அரசமைப்பு தெரியவில்லை: தவராசா சாடல்





பக்கம் 5

நீதியரசராக இருந்து ஓய்வுபெற்ற நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு இன்றுவரை அரசமைப்பு பற்றி தெரியவில்லை என வட மாகாண சபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா தெரிவித்துள்ளார்.

## தமிழ்க் கட்சிகள் ஒரு மனதாக பேச்சுக்களில் பங்கேற்க வேண்டும்! மகிந்த வலியுறுத்துகின்றார்



பக்கம் 5

தமிழ்க் கட்சிகள் ஒரு மனதாக பேச்சுக்களில் பங்கேற்க வேண்டும். இரு மனநிலையில் பேச்சில் பங்கேற்கக் கூடாது என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

# தமிழீழ விடுதலைப் புலிகளுடனான போர் மட்டுமே முடிந்தது: ரணில்



பக்கம் 5

தமிழீழ விடுதலைப்புலிகளுடனான போர் மட்டுமே முடிந்தது. ஏனைய போர்கள் தொடர்வதாகத் தோன்றுகிறது என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை கொழும்பு நகரம் மற்றும் அதன் சுற்றுப்புறங்களைச் சுற்றி பாதுகாப்புப் படையினர் மற்றும் பொலிஸாரினால் ஏற்படுத்தப்பட்டிருந்த கடுமையான பாதுகாப்பு வளையம் பற்றிய முறைசாரா கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இந்த விடயத்தினை தெரிவித்துள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இதன்போது பாதுகாப்பு தரப்பில் உள்ள உயர் மட்ட அதிகாரிகளிடையே ஏற்பட்டுள்ள

## கனேடிய பிரதமர் அறிக்கை அலி சப்ரியின் கண்டனத்திற்கு சாணக்கியன் பதிலடி!



பக்கம் 5

இலங்கையில், 14 ஆண்டுகளுக்கு முன்பு முடிவுக்கு வந்த ஆயுதப் போரில் ஏற்பட்ட உயிரிழப்புக்கள் குறித்து கனேடிய பிரதமர் வெளியிட்ட அறிக்கைக்கு கண்டனம் தெரிவித்துள்ளமை சிறுபிள்ளைத்தனமான செயற்பாடு என நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன்

## ஞாயிற்றுக்கிழமைகளில் யாழ்.மாவட்ட தனியார் வகுப்புகளுக்கு விடுமுறை! அரச அதிபர் அறிவிப்பு



பக்கம் 5

ஞாயிற்றுக்கிழமைகளில் யாழ் மாவட்டத்தில் இயங்கும் தனியார் வகுப்புகளுக்கு விடுமுறை வழங்குவதற்கான முயற்சியை மேற்கொள்ளவுள்ளதாக யாழ் மாவட்ட அரச அதிபர் சிவபாலசுந்தரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம

## பொறுப்புக்கூறல் விவகாரத்தை பொறுத்தமட்டில் இதுவரையில் இலங்கை அரசாங்கம் எதனையும் செய்யவில்லை : சுமந்திரன் பதிலடி..!



பக்கம் 5


பொறுப்புக்கூறல் விவகாரத்தை பொறுத்தமட்டில் இதுவரையில் அரசாங்கம் எதனையும் செய்யவில்லை. அவ்வாறு முன்னெடுக்கப்படக்கூடிய நடவடிக்கை நடுநிலையுடன் இருக்கவேண்டுமானால், அது சர்வதேச பொறிமுறையாக அமையவேண்டியது அவசியம் என்று தமிழரசு கட்சியின் ஊடகப் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ முள்ளிவாய்க்கால் நினைவேந்தலையொட்டி வெளியிட்ட கருத்தை கடுமையாக கண்டித்து நிராகரிப்பதாக இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகரிடம் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்திருந்தார்.

எவ்வித ஆதாரங்களுமின்றி முன்வைக்கப்படும் "இனப்படுகொலை" தொடர்பான குற்றச்சாட்டுக்கள் இலங்கையர்களை துருவமயப்படுத்துவதற்கு வழிவகுக்கும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறானதொரு பின்னணியில்

# குருதியில் நனைந்த வன்னிப் படுகொலையை வரலாற்றாக்கிய



## பிரான்ஸிஸ் ஹாரிசனின் நூலான: “சாட்சியமற்ற போரின் சாட்சியங்கள்”

2009 இல் இலங்கையில் இறுதி யுத்தம் முடிவடைந்த போது என்ன நடந்தது என்பதை தமிழர்கள் அல்லாதவர்களுக்கு கூறவே இந்த புத்தகத்தை எழுதினேன் என்றும், தமிழ் மக்கள் படும் கொடுமையை உலகில் பல தமிழர்கள் கூட அறிந்திருக்கவில்லை என்று பிரான்சிஸ் ஹாரிசன் தனது முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார்.

**“பான் கி-மூனின் ருவாண்டா“**

பிரான்சிஸ் ஹாரிசன் இந்நூலில் எழுதிய முன்னுரையில், 2009 இல் இலங்கையில் யுத்தம் முடிவடைந்த போது என்ன நடந்தது என்பதை தமிழர்கள் அல்லாதவர்களுக்கு கூறவே இந்த புத்தகத்தை எழுதினேன். தமிழ் மக்கள் படும் கொடுமையை பல தமிழர்கள் அறிந்திருக்கவில்லை என்பதை பின்னர் தான் அறிந்தேன். தாங்க முடியாத அழிவின் அளவு மற்றும் அது எவ்வளவு விரைவாக நடந்தது என்பதைக் கருத்தில் கொண்டு, இது மிக மோசமான பேரழிவு என்பதில் சந்தேகம் இல்லை. நான் இந்நூலை (ஆங்கிலத்தில்) எழுதி வெளியிட்ட பிறகு, 2012 நவம்பரில் ஐ.நா பொதுச் சபை அறிக்கை ஒன்றை வெளியிட்டது.

> **“(உலகம் வாழ் தமிழர்களின் கவனத்தை பெருமளவிற்கு ஈர்த்துள்ள பிரான்ஸிஸ் ஹாரிசனின் (Frances Harrison) ‘ஈழம்: சாட்சியமற்ற போரின் சாட்சியங்கள்’ நூலானது, வன்னிப்படுகொலையின் கொடூரமான சாட்சியங்கள் பலவற்றை இந்த நூல் வரலாற்றுப் பதிவாக முதல் தடவையாக வெளியே 2012 ஆண்டு கொண்டு வந்தது)”**

ஈழப் போரின் போது ஐ.நா.வின் நடத்தை குறித்த உள்ளக விசாரணை அறிக்கை அது. ஐ.நா சபை பற்றி இந்த புத்தகத்தில் நான் எழுதியிருப்பதை அந்த அறிக்கை உறுதிப்படுத்துகிறது.

2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவடைந்த சில வருடங்களில் ஐ.நா ஒரு “பெரிய தவறை“ செய்துள்ளதாகவும், சிலர் அதை “பான் கி-மூனின் ருவாண்டா“ என்றும் வர்ணித்ததாகவும் அந்த அறிக்கை கூறியுள்ளது.

போரின் இறுதி ஐந்து மாதங்களில் மட்டும் 70,000 பொதுமக்கள் வரை கொல்லப்பட்டதாக ஐ.நா.வின் முதல் அறிக்கை இதுவாகும். இவையெல்லாம் எப்படி நமக்குத் தெரியாமல் போனது? பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தத்தின் பின்னணியில் சர்வதேச ஆதரவுடன் இலங்கை அரசாங்கம் இந்தப் போரை எவ்வாறு நடத்தியது என்பதை எதிர்காலத்தில் கல்வியாளர்களும் ஆய்வாளர்களும் கண்டுபிடிப்பார்கள் என அவர் எழுதிய முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார்.

**சாட்சியங்களற்ற போரான ஈழம் :**

சர்வதேச சமூகமும், ஐக்கிய நாடுகள் அவையும் எவ்வளவு கவனம் எடுத்து மறைக்க முயன்றாலும் மறுபடியும் மறுபடியும் கொலைக்கள ஆவணங்களும், சாட்சியங்களும், வாக்குமூலங்களும் இன்று பரவலாகக் கிடைக்கின்றன. பிபிசியின் செய்தியாளராக இலங்கையில் பணிபுரிந்த ஃபிரான்ஸிஸ் ஹாரிசனின் (Frances Harrison) இந்த நூல் சான்றுகளையும் தகவல்களையும் உயிர் தப்பிப் பிழைத்தோரின் அவல அனுபவங்களையும் புரிந்துணர்வுடனும் உணர்வுத் தோழமையுடனும் ஒருசேரத் தருகிறது. ஃபிரான்ஸிஸ் ஹாரிசனின் ஆங்கில நூலை தமிழில் மொழிபெயர்த்திருக்கிறார் என்.கே. மகாலிங்கம்.

பல ஆண்டுகள் பிபிசியின் வெளியுலக செய்தியாளராக ஆசியாவில் பணியாற்றிய அவர், 2000 முதல் 2004 வரை பிபிசியின் இலங்கைச் செய்தியாளராகச் செயல்பட்டார். 1966இல் பிறந்த ஃபிரான்ஸிஸ் ஹாரிசன் கேம்பிரிட்ஜ் டிரினிட்டி கல்லூரியிலும் ‘ஸ்கூல் ஆப் ஓரியண்டல் அண்டு ஆப்பிரிக்கன் ஸ்டடீ’ஸிலும் லண்டன் இம்பீரியல் கல்லூரியிலும் கல்வி கற்றவர். அத்துடன் ஆம்னெஸ்டி இன்டர்நேஷனல் நிறுவனத்திலும் பணிபுரிந்திருக்கிறார். இவருடைய கணவர் ஈரானியர். ஒரு மகன் இருக்கிறார்.

இது தமிழ் தேசியம் அல்லது இன மோதல்களின் தோற்றம் மற்றும் வளர்ச்சி பற்றிய வரலாற்று ஆய்வுக் கட்டுரை அல்ல. இலங்கையில் போர் மற்றும் மோதல்கள் இன்னும் முடிவடையவில்லை என்பதை நாம் உணர வேண்டியது அவசியம்.

நீதி, நியாயம் மற்றும் நல்வாழ்வுக்கான ஐநா பாதிக்கப்பட்டவர்களின் விருப்பத்தை திருப்திப்படுத்த அறிக்கைகள், ஆவணப்படங்கள் மற்றும் புத்தகங்கள் மட்டும் போதாது. போரில் உயிர் பிழைத்தவர்களுக்கும் தங்கள் கதைகளை என்னுடன் பகிர்ந்து கொண்டவர்களுக்கும் எனது முதன்மையான நன்றிகள் என தனது முன்னுரையில் போரின் பின்னணியை விளக்க முயன்றுள்ளார்.

டிசம்பர் 2012 இல் பிரான்சிஸ் ஹாரிசன் தமிழ் பதிப்பிற்கு எழுதிய முன்னுரையில் மேலும், இத்தகைய போர்ச் சூழலில் சர்வதேச சட்டங்கள் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் இந்த அவலத்தை வெளிப்படுத்தத் தவறிய ஊடகங்கள் பற்றியும் அவர்கள் ஆய்வு செய்து எழுத வேண்டும். இலங்கையைப் பற்றி அதிகம் தெரியாத வாசகர்களை மனதில் வைத்து இந்தப் புத்தகம் ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ளது. அத்தகைய வாசகர்களுக்கு இலங்கை என்றால் தேநீர் மற்றும் கிரிக்கெட் விளையாட்டு மற்றும் கடற்கரைகள் நினைவுக்கு வருகின்றது என்றும் சாடியுள்ளார்.

**குருதியில் நனைந்த ஈழப்படுகொலை:**

குருதியில் நனைந்த ஈழப்படுகொலை சாட்சியங்களை,ஓர் ஊடகவியலாளரின் சாட்சியமாக காலச்சுவடு பதிப்பகம் வெளியிட்டுள்ள ஃபிரான்ஸிஸ் ஹாரிசனின் “ஈழம்: சாட்சியமற்ற போரின் சாட்சியங்கள்” நூல் சர்வதேச ரீதியில் தமிழர்களின் கவனத்தையும் பெருமளவிற்கு ஈர்த்துள்ளது என்றும் கூறலாம்.

ஓர் ஊடகவியலாளரின் சாட்சியமான ஃபிரான்ஸிஸ் ஹாரிசன், குருதியில் நனைந்த ஈழப்படுகொலை சாட்சியங்கள் நூலில் பகிர்ந்த சில பதிவுகள்: அதிபயங்கரமான படுகொலைகள் நடந்த அந்தப் பொன்னிற மணல் பிரதேசத்திலிருந்து தப்பி வருகிறார் லோகீசன். ஆறு அடி உயரம். மழிக்கப்படாத தாடி. நீண்ட குழம்பிய தலைமுடி. இருபத்தேழு வயது. தன் தந்தையை ஒரு குழந்தையைப் போல் தூக்கி வருகிறார். தன் தலைக்கு மேலாகப் பறந்துகொண்டிருக்கும் துப்பாக்கிக் குண்டுகளை அவர் கவனிக்கவில்லை.

‘சாட்சியமற்ற போரின் சாட்சியங்கள்’ நூலின் இரண்டாம் பதிப்பில், ஆங்கில பதிப்பிலும் முதல் தமிழ் பதிப்பிலும் இடம்பெறாத இரண்டு பகுதிகள் ‘மருத்துவ ஊர்தி ஓட்டுநர்’, ‘போராளியின் மனைவி’ புதிய பதிப்பும் சேர்க்கப்பட்டுள்ளன. சாட்சியமற்ற போராக இதுவரை கருதப்பட்ட ஈழத் தமிழரின் 2009 முள்ளிவாய்க்கால் இனப்படுகொலைக்குப் பல விரிவான சாட்சியங்களை முதல் முறையாக இந்நூல் முன்வைத்துள்ளது.

காலடியில் கிடக்கும் செத்த உடல்களைக் கவனிக்கவில்லை. எல்லாவற்றுக்கும் மேலாக அவருக்கு இப்போது தண்ணீர்த் தாகம். பயங்கரமான தண்ணீர்த் தாகம். அது மட்டுந்தான் அவருக்கு இப்போது நினைவிலிருக்கிறது. அது 2009ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம். கொடுமையான வெயில் எரிக்கும் பின் மதியம்.

**முள்ளிவாய்க்கால் இறுதிநாட்கள்:**

இலங்கையில் முன்னர் பிபிசி செய்தியாளராக பணியாற்றிய ஃபிரான்சிஸ் ஹாரிசன் முள்ளிவாய்க்காலில் இறுதிநாள் வரை துன்புற்றோரின் அவல அனுபவங்களை அக்கறையுடனும் புரிதலுடனும் துல்லியமாக பதிவு செய்துள்ளார்.

மேலும் அப்பதிவில், பல்லாயிரக்கணக்கான மக்களை மனிதக் கேடயமாகப் பயன் படுத்துவதற்காக ஒரு சிறிய கடற்கரைப் பகுதிக்குத் தங்களுடன் கூட்டிச் சென்றார்கள் என்ற குற்றச்சாட்டும் புலிகள்மீது சுமத்தப்பட்டது. அந்தக் குற்றச்சாட்டை லோகீசன் மறுத்தார். எங்குமே மக்களால் ஓடித் தப்ப முடியவில்லை.

சாட்சியமற்ற போரின் சாட்சியங்கள் நூலில் இருந்து, ஒரு பக்கம் கடல். மற்றொரு பக்கம் முழுவதும் ராணுவம். அதுவொரு கொலைக்களக் காட்சி. இறந்த பொதுமக்கள் வெள்ளைக் கொடிகளைப் பிடித்தபடி கிடந்தார்கள். மருத்துவமனையைச் சுற்றிக் குண்டுகள் விழுந்த குழிகள். அவற்றின் பின்னாலும் பனை மரங்களிடையே விழுந்துகொண்டிருக்கும் குண்டுகளின் சத்தங்கள். திக்குமுக்காட வைக்கும் பழுப்பு நிறப் புகை காற்றில் பரந்திருந்தது.

**ஊடகவியலாளரின் சாட்சியம்:**

முட் கம்பி அடித்த வேலிக்குள் செம்மறி ஆடுகளைப் போல் எங்களை அடைத்தார்கள். எங்களின் உடைகளை எல்லாம் கழற்ற வைத்தார்கள். வயது, பால் வித்தியாசம் இன்றி எல்லோரும், பச்சைக் குழந்தைகள் கூடத் தங்கள் உடைகளைக் களைய வேண்டும். காவல் தளத்திற்குப் பின்னால் அவளை வன்புணர்வுக்கு ஆளாக்கி இருக்க வேண்டும். காவல் தளத்துக்குப் பின்னால் அந்தச் சிறுமி அரை நிர்வாணமாக நின்று அழுவதைக் கண்டேன்”ஈழம் சாட்சியமற்ற போரின் சாட்சியங்கள்” நூலில் பல உண்மைகளை ஃபிரான்ஸிஸ் ஹாரிசனின் பகிர்ந்துள்ளார்.

ஒரு போர் மண்டலத்திற்குள் இருப்பது எப்படி இருக்கும் என்பதைப் புரிந்துகொள்ள அவர்கள் எனக்கு உதவினார்கள். அவை விலைமதிப்பற்றவை. தங்கள் முயற்சி வீணாகிவிட்டதே என்று வருந்தக்கூடாது. அவர்களின் பெயர்களை என்னால் கூற முடியாது.

அவர் பதிவு செய்த கதைகள் அனைத்தும் இடப்பற்றாக்குறையால் இந்நூலில் இடம் பெறவில்லை.

சிலர் தங்களின் பயங்கரமான அனுபவங்களை என்னுடன் பகிர்ந்து கொள்ள பல மணிநேரம் செலவழித்துள்ளனர். இலங்கையை விட்டு வெளியேறிய பிறகு என்னுடன் தொடர்பில் இருந்த சிங்கள, தமிழ் நண்பர்களின் உதவியின்றி என்னால் இந்நூலை எழுதியிருக்க முடியாது.

2009 இல் கொழும்பில் நடந்த செய்தியாளர் சந்திப்புகளின் மூலம் எனக்குத் தெரிந்த பல ஊடகவியலாளர்கள் புலம்பெயர்ந்த நிலைக்குத் தள்ளப்பட்டனர். அவர்களின் அனுபவத்திலிருந்து அந்த சொர்க்கத் தீவு எவ்வளவு மாறிவிட்டது என்பதை என்னால் புரிந்து கொள்ள முடிந்தது.

அவர்களுடைய உதவியுன்றி இந்தப் புத்தகத்தை எழுத நினைத்திருக்கவே மாட்டேன் என்பது நிச்சயம். பேச முடியாத உயிர் பிழைத்தவர்களைக் கண்டுபிடிக்க பலர் எனக்கு உதவியுள்ளனர். பலரது பாதுகாப்புக்காக அவர்களின் பெயர்களை என்னால் வெளியிட முடியாது  என பிரான்சிஸ் ஹாரிசன் தமிழ் பதிப்பிற்கு எழுதிய முன்னுரையில் தெரிவித்துள்ளார்.

**(முட் கம்பி அடித்த வேலிக்குள் செம்மறி ஆடுகளைப் போல் எங்களை அடைத்தார்கள். எங்களின் உடைகளை எல்லாம் கழற்ற வைத்தார்கள். வயது, பால் வித்தியாசம் இன்றி எல்லோரும், பச்சைக் குழந்தைகள் கூடத் தங்கள் உடைகளைக் களைய வேண்டும். காவல் தளத்திற்குப் பின்னால் அவளை வன்புணர்வுக்கு ஆளாக்கி இருக்க வேண்டும். காவல் தளத்துக்குப் பின்னால் அந்தச் சிறுமி அரை நிர்வாணமாக நின்று அழுவ தைக் கண்டேன் ”ஈழம் சாட்சியமற்ற போரின் சாட்சியங்கள்” நூலில் பல உண்மைகளை ஃபிரான்ஸிஸ் ஹாரிசனின் பகிர்ந்துள்ளார்)**

**- நவீனன்-**

## இரண்டாங்கட்ட டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் !!



ஜனாதிபதியின் டெங்கு காட்டுப்பாட்டு வேலைத்திட்டத்தின் கீழ் கல்முனை மாநகர ஆணையாளர் அஸ்மி ஆதம்லெப்பை அவர்களினால் முன்னெடுக்கப்பட்ட இரண்டாங்கட்ட டெங்கு ஒழிப்பு சிரமதானம் நேற்று கல்முனை வடக்கு பிரதேசத்தில் நடைபெற்றது.

கல்முனை மாநகர சபை சுகாதாரப் பிரிவு பொறுப்பு உத்தியோகத்தர் சிரேஷ்ட ஊடகவியலாளர் யு. எம். இஸ்ஹாக் தலைமையில் கல்முனை வடக்கு பிரதேசத்தில் அமைந்துள்ள சேனைக்குடியிருப்பு, நற்பிட்டிமுனை, மணச்சேனை ஆகிய கிராமங்களில் இந்த சிரமதானப் பணி சிறப்பாக இடம்பெற்றது.

நிகழ்வில் கல்முனை மாநகர சபை சுகாதாரப் பிரிவின் சுகாதார மேற்பார்வை உத்தியோகத்தர் ஏ. எம்.அதுகம் உட்பட உதவி மேற்பார்வை உத்தியோகத்தர்களான ஈ.இராகவான், ஆர். லிங்கராஜா, எம். எம். எம். றிஸ்வான் ஆகியோரும் மாநகர சபை சுகாதார ஊழியர்களும் கலந்து கொண்டனர். மாநகர ஆணையாளரின் அதிரடி நடவடிக்கை காரணமாக பெருந்தொகையான டெங்கு பரவுவதற்கு காரணியான கழிவு பொருட்கள் சேகரிக்கப்பட்டன.

## கல்முனை பிராந்தியத்தில் தொழுநோய்

### பரிசோதனைகளையும் சிகிச்சைகளையும் விரிவுபடுத்த நடவடிக்கை !

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம் றிபாஸ் அவர்களின் ஆலோசனைக்கும் வழிகாட்டலுக்கும் அமைவாக கல்முனை பிராந்திய தொற்றுநோய் தடுப்பு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.ஏ.சீ எம் பசால் அவர்களினால் இன்று கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கேட்போர் கூடத்தில் தொழுநோயை கண்டறிவதற்கும் சிகிச்சைகளை விரைவுப்படுத்துவதற்குமான கலந்துரையாடல் தேசிய தொழுநோய் தடுப்புப் பிரிவின் பணிப்பாளர் டாக்டர் பிரசாத் ரணவீரர் அவர்களின் பங்குபற்றுதலுடன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

குறித்த கலந்துரையாடலில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அவர்களுடன் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் எம். பி.ஏ வாஜித், பிராந்திய தொற்றுநோய் தடுப்பியலாளர் வைத்தியர் எம்.ஏ.சி.எம். பசால் உள்ளிட்ட பிரிவு தலைவர்களும், கிராம நிலதாரிகளும், சுகாதாரத்துறை ஊழியர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

குறித்த கலந்துரையாடலின் போது கல்முனை பிராந்தியத்தில் தொழுநோயை கண்டறிவதற்கான பொறிமுறைகளை இலகுப்படுத்துவதற்கும் துரிதப்படுத்துவதற்கும் அதற்கான சிகிச்சைகளை மக்கள் அச்சமின்றி பெற்றுக் கொள்வதற்கான பொறிமுறை பற்றி மக்களை தெளிவுபடுத்துவதற்குமான நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக பணிப்பாளர் தெரிவித்தார். குறித்த நிகழ்வில் பங்கு பற்றிய தேசிய தொழுநோய் தடுப்பு பிரிவின் பணிப்பாளர் தனது உரையின் போது கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் தொழுநோய் கண்டறிதலுக்கான செயற்பாடுகள் மற்றும் அதனை கட்டுப்படுத்தி சிறப்பாக முகாமை செய்வது தொடர்பிலும் தமது திருப்தியை வெளியிட்டிருந்தார்.



## திருக்கோணேஸ்வரர் ஆலயத்தில் யாழ். கதிர்காம யாத்திரீகர்கள்.

### சல்லியிலிருந்து கடலில் பயணித்தனர்!



யாழ்ப்பாணம் செல்வச் சந்நதி ஆலயத்திலிருந்து கடந்த ஆறாம் தேதி புறப்பட்ட ஜெயா வேல்சாமி தலைமையிலான யாழ். கதிர்காம பாதயாத்திரைக்குழு நேற்று (21) ஞாயிற்றுக் கிழமை வரலாற்று பிரசித்தி பெற்ற திருகோணமலை திருக்கோணேஸ்வரர் ஆலயத்தை வந்தடைந்தனர்.

காலையில் சாம்பல் தீவு சல்லியம்மன் ஆலயத்தை தரிசித்துவிட்டு கடல் மார்க்கமாக திருமலை நகரை அடைந்தனர். கடல் மார்க்கமாக இயந்திரப்படகு மூலம் திருமலை மூன்றாம் கட்டையை வந்தடைந்தனர். எலவே இவர்கள் புல்மோட்டை பிரதேசத்திலும் கடல் மார்க்கமாக பயணித்தமை குறிப்பிடத்தக்கது.

ஜெயா வேல்சாமி தலைமையிலான குழுவினர் 17 ஆவது நாளான நேற்று திருகோணேஸ்வரர் ஆலயத்தை தரிசித்து அங்கு பகல் போசனத்தையும் நிறைவு செய்தனர். நேற்று மாலை அவர்கள் வில்லூன்றி கந்தசாமி கோயிலில் தரித்தனர்.

## ஹிந்து சுயம் சேவா சங்கம் நாடளாவிய ரீதியில் பெண் தலைமை தாங்கும்

### 10 ஆயிரம் பேருக்கு உலர் உணவு வழங்கும் திட்டம் மட்டக்களப்பில் ஆரம்பித்து வைப்பு

ஹிந்து சுயம் சேவா சங்கம் நாடளாவிய ரீதியில் பெண் தலைமை தாங்கும் 10 ஆயிரம் பேருக்கு உலர் உணவு வழங்கும் திட்டத்தினை மட்டக்களப்பில் ஈழுத்து திருச்செந்தூர் முருகன் ஆலையத்தில் சனிக்கிழமை (20) ஆரம்பித்து வைத்து முதற் கட்டமாக பெண் தலைமை தாங்கும் 176 பெண்களுக்கு தலா ஒருவருக்கு 25 கிலோ அரிசி 25 கிலோ கோதுமை மா கொண்ட உலர் உணவு பொதிகளை வழங்கி வைத்தனர்.

அமெரிக்கா சேவா சர்வதேச பவுண்டேசன் அனுசரணையுடன் ஆறுமுக நாவலர் அமைப்பின் திட்டத்தில் முதற்கட்டமாக பெண் தலைமை தாங்கும் 10 ஆயிரம் பேருக்கு உலர் உணவு வழங்க ஹிந்து சுயம் சேவா சங்கம் திட்டமிட்டது.

இந்த திட்டத்தினை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் மட்டக்களப்பில் ஈழத்து திருச்செந்தூர் முருகன் ஆலைய மண்டபத்தில் சுயம் சேவா சங்க கிழக்கு மாகாண தலைவர் அருணாச்சலம் ரவீந்திரன் தலைமையில் இடம்பெற்றது. இதில் அதிதிகளாக யுனைற்றற் புத்தகசாலை உரிமையாளர் பி.செல்வராஜா சன்பான்சி கடை உரிமையாளர் சிவபாதசுந்தரம், அபர்ணா தங்க நகைக்கடை உரிமையாளர் ஆர் சண்முகராசா,

வவுணதீவு இலங்கை வங்கி முகாமையாளர், ஈழத்து திருச்செந்தூர் முருகன் ஆலைய பிரதம குருக்கல் மற்றும் இந்து சமய செயற்பாட்டாளர்கள் கலந்துகொண்டு மங்கள விளக்கேற்றி சம்பிராய பூர்வமாக முதற்கட்டமாக தெரிவு செய்யப்பட்ட பெண்தலைமை தாங்கும் 176 பெண்களுக்கு இந்த உலர் உணவு பொதிகளை வழங்கிவைத்தனர்.





## பாரம்பரிய தமிழர் பறை இசையுடன்

### வவுனியாவில் சிறப்பாக இடம்பெற்ற நுங்குத் திருவிழா

பாரம்பரிய தமிழர் பறை இசையுடன் நுங்குத் திருவிழா நிகழ்வு வவுனியா, மரக்காரம்பளையில் நேற்று (21.05) இடம்பெற்றது.

பனை மரத்தின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்தும் நோக்குடன் சுயாதீன தமிழ் இளைஞர்களின் ஏற்பாட்டில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

நிகழ்வில் பனம்பொருள் உற்பத்திப்பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டதுடன், பண்டார வன்னியன் புத்தகசாலையின் புத்தக கண்காட்சியும் இடம்பெற்றது. இதில் அதிகளவிலான இளைஞர், யுவதிகள் கலந்து கொண்டதுடன், கடும் வெப்பத்தை போக்க நுங்கினையும் குடித்து மகிழ்ந்தனர்.

சுயாதீன தமிழ் இளைஞர்களின் ஏற்பாட்டில் தொடர்ச்சியாக நான்காவது வருடமாகவும் குறித்த நிகழ்வு முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# தகவல் அறியும் உரிமைச் சட்டம் மூலம் விளக்கம் கோரிய சமூக செயற்பாட்டாளரான இளைஞரை பொலிஸ் எனக் கூறி பிரதமர் அலுவலகத்திற்கு கடிதம் அனுப்பிய வவுனியா பிரதேச செயலகம்!




தகவல் அறியும் உரிமைச் சட்டம் மூலம் தகவல் கோரிய தன்னை பொலிசார் எனக் கூறி பிரதமர் அலுவலகத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாகவும், வவுனியா பிரதேச செயலகத்தின் செயற்பாட்டால் பொலிஸ் புலனாய்வாளர் என மக்கள் தன்னை எண்ணுவதாகவும் சமூக செயற்பாட்டாளரான சூரியகுமார் கிருபன் தெரிவித்துள்ளார்.

வவுனியா ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியா, ஓமந்தை, அரச வீட்டுத் திட்டப் பகுதியில் 219 பேருக்கான காணி திட்டங்கள் வழங்கவுள்ளதாக வவுனியா பிரதேச செயலகத்தால் அறிவித்து இருந்தார்கள். இது தொடர்பான முறைப்பாடுகள் இருந்தால் தெரியப்படுத்துமாறு கோரியிருந்தனர். அதன்போது நான் 219 பேரது விபரம் தொடர்பில் பிரதேச செயலாளருக்கு தெரியப்படுத்தும் போது இதில் ஊழல் நடைபெற்றுள்ளது. காணி உள்ள பலருக்கும் கொடுக்கப்பட்டுள்ளது என தெரியப்படுத்தியதுடன், இது தொடர்பில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாகவும் தகவல் கோரி விண்ணப்பித்து இருந்தேன்.

அதற்கு எனக்கு சரியான பதில் கிடைக்கவில்லை. இது சம்மந்தமாக பிரதேச செயலாளரிடம் நேரடியாக தெரியப்படுத்தியும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அவ்வாறான விபரங்கள் இல்லை எனவும், நேர்முகத் தேர்வு குறித்து எந்த விபரங்களும் தரப்படவில்லை. இதனால் கடிதம் ஒன்று எழுதி அதனை பிரதேச செயலாளருக்கு அனுப்பி அதன் பிரதிகளை ஜனாதிபதி, பிரதமர், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு, ஆளுனர், மாவட்ட செயலாளர் ஆகியோருக்கும் அனுப்பியிருந்தேன்.

இதன்பின் பிரதமர் செயலகத்தில் இருந்து ஒரு கடிதம் வந்தது. இது தொடர்பில் ஆராய்வதாகவும் இது தொடர்பான பதில் பிரதேச செயலகத்தால் தமக்கு வழங்கும் வேளை, தங்களுக்கும் அது அனுப்பி வைக்கப்படும் என தெரியப்படுத்தப்பட்டிருந்தது.

அதற்கான பதிலை பிரதேச செயலாளர் பிரதமர் அலுவலகத்திற்கு அனுப்பியுள்ளதுடன், அதன் பிரதியை எனக்கு அனுப்பியுள்ளார். அதில் நான் கேட்ட கேள்விகளுக்கு சம்மந்தமில்லாத பதில்களும் என்னையும், எனது குடும்பத்தாரைப் பற்றியும் அவதூறுகளையும் எழுதியிருந்தார். அதில் நான் ஒரு பொலிஸ் உத்தியோகத்தர் என குறிப்பிட்டுள்ளனர். அந்தக் கடிதம் பிரதமருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

அன்றிருந்து எனக்கு ஒரே பிரச்சனை. நான் தனியார் துறையில் வேலை செய்கிறேன். பிரதேச செயலகத்தால் நான் பொலிசார் என குறிப்பிட்டுள்ளமையால் நான் செல்லும் இடங்களில் என்னை பொலிஸ் புலனாய்வாளர் என சந்தேகிக்கின்றார்கள்.

நான் பொது மக்கள் மத்தியில் செல்ல முடியவில்லை. இதனால் எனக்கு மனஉளைச்சலும் ஏற்பட்டுள்ளது. இது தொடர்பில் மனித வுரிமை ஆணைக்குழுவுக்கும் முறையிட்டுள்ளேன். இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனக் கோருவதுடன், ஓமந்தை அரச வீட்டுதிட்டத்தில் முறைகேடற்ற வகையில் காணியை வழங்க வேண்டும் எனவும் கோருகின்றேன் எனத் தெரிவித் தார்.

## ஒரு சமஷ்டி முறையிலான அதிகார பரவலான அரசியல் தீர்வே தேவை!! அகம் மனிதாபிமான வளநிலைய தலைவர் கண்டுமணி லவகுகராசா!!






கடந்த 70 வருடமாக தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்சனைக்கான ஒரு அரசியல் தீர்வு இன்று வரை எட்டாக்கனியாக இருக்கின்றது. எனவே தமிழ் மக்களுக்கு ஐக்கிய இலங்கைக்குள் ஒருங்கிணைந்த மீளப் பெறமுடியாத ஒரு சமஷ்டி முறையிலான அதிகார பரவலான அரசியல் தீர்வே தேவை என அகம் மனிதாபிமான வளநிலைய தலைவர் கண்டுமணி லவகுகராசா தெரிவித்தார்.

மட்டக்களப்பு தன்னாமுனையிலுள்ள மியாமி மண்டபத்தில் மக்கள் பிரகடனம் எனும் தொனிப் பொருளில் நேற்று ஞாயிற்றுக்கிழமை (21) இளைஞர் யவதிகள் மற்றும் பொதுமக்களுக்கு அறிவூட்டும் பயிற்சி பட்டறை ஆரம்பித்து வைத்த போது அவர் இவ்வாறு தெரிவித்தர்.

வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு அமைப்பு கடந்த 70 வருடமாக வடக்கு கிழக்கில் பாதிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்சனைக்கான ஒரு அரசியல் தீர்வை கோரிவருகின்றது

இதன் அடிப்படையில் பாதிக்கப்பட்ட மக்களின் அரசியல் தீர்வு தொடர்பாக முன்னெடுப்பதற்காக கடந்த வருடம் வடக்கு கிழக்கில் இருக்கின்ற மக்களுக்கு கௌரவமான அரசியல் தீர்வு கோரிக்கையை மையப்படுத்தி 100 நாள் செயற்திட்டத்தை செய்திருந்தோம்.

அதன் இறுதி நாளான நவம்பர் 8ம் திகதி இலங்கை தேசத்திற்கும் சர்வதேசத்திற்கும் வடக்கு கிழக்கில் உள்ள மக்களுக்கு ஒரு அரசியல் தீர்வாக ஐக்கிய இலங்கைக்குள் ஒருங்கினைந்த மீளப் பெறமுடியாத ஒரு சமஷ்டி முறையிலான அதிகார பரவலான அரசியல் தீர்வை பிரகடனப்படுத்தியுள்ளோம்.

அதனை மக்கள் பிரகடனத்தை பலப்படுத்துவதற்காக தெற்கிற்கும் சர்வதேசத்திற்கும் கொண்டு செல்வதற்காக முதல் கட்டமாக இலங்கையில் இருக்கின்ற 13 தூதுவராலயங்களுக்கு மற்றும் ஐ.நாடுகள் சபை அலுவலகம் ஐரோப்பிய யூனியன் காரியாலயத்துக்கு சென்று இதன் முக்கியத்துவம் மற்றும் கடந்த காலங்களில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு கட்டாயம் அரசியல் தீர்வு தேவை என வலியுறுத்தி பரிந்துரைத்தோம்.

அதிகார பகிர்வு கருத்துருவாகம் கட்டாயம் மக்கள் மயப்படுத்த வேண்டும் என்ற விடையங்களை தெளிவுபடுத்தி வருகின்றோம். இது மக்கள் மயப்படுத்தப்படும் சந்தர்ப்பத்தில் தான் தேசிய ரீதியாக சர்வதேச ரீதியாக பலம் பொருந்தியதாக இருக்கும்

இதற்கமைய திருகோணமலையிலும் யாழ்ப்பாணத்திலும் நேற்று மட்டக்களப்பில் மேற்கொண்டு வருகின்றோம். தற்காலத்தில் சமஷ்டி முறையிலான அதிகார பகிர்வு பொருத்தமானதாக இருக்கும் எனவே ஐக்கிய இலங்கைக்குள் ஒருங்கினைந்த மீளப் பெறமுடியாத ஒரு சமஷ்டி முறையிலான அதிகார பகிர்வு தவிர வேறு இருக்கமுடியாது என்பது எங்கள் கருத்தாகும் என்றார்



## வடகிழக்கிலுள்ள தமிழ்த தேசிய கட்சிகள் மீது புலம்பெயர் தமிழர்களுக்கு நம்பிக்கை இல்லை!

### இதற்கு தமிழ் கட்சிகள் பதில் கூறுவார்களா.??



இலங்கையிலுள்ள, தமிழ் அரசியல் கட்சிகள் மீது, புலம்பெயர் தமிழர்களுக்கு தற்போது நம்பிக்கை இல்லை என ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனாதிபதி மற்றும் ஐக்கிய தேசிய கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களுக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

புலம்பெயர் தமிழர்கள் பலர் இலங்கையில் அபிவிருத்தி பணிகளுக்கு ஒத்துழைக்க விரும்புகின்றனர். எம்முடன் தொடர்பு கொண்டு கலந்துரையாடினர்.

குறிப்பாக, ஜனாதிபதியின் அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்க புலம்பெயர் தமிழர்கள் ஆர்வமாக உள்ளனர். உண்மையில், அவர்கள், நெருக்கடியான இந்த நிலையில் இலங்கைக்கு உதவு வதற்கு தயாராகவே உள்ளனர். தமிழ் அரசியல் கட்சிகள் மீது புலம்பெயர் தமிழர்களுக்கு தற்போது நம்பிக்கை இல்லை. அவர்கள் அதனை விரும்பவும் இல்லை. இலங்கையில் வாழும் தமிழர்களின் வாழ்வியலில் வளமான மாற்றத்தையே புலம்பெயர் தமிழர்கள் விரும்புகின்றனர்.

வடக்கு, கிழக்கில் உள்ள இளையோரும் அதனையே கோருகின்றனர். எதிர்வரும் 27 மற்றும் 28ஆம் திகதிகளில் வடக்குக்கு மீண்டும் செல்லவுள்ளேன்.

## எனது கட்சிக்கு மூன்று முக்கிய குறிக்கோள் உள்ளது! : சி.வீ.விக்னேஸ்வரன்





தமது காட்சிக்கு தன்னாட்சி, தற்சார்பு, தன்நிறைவு என்ற மூன்று முக்கியமான குறிக்கோள் உள்ளதாக தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வீ.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான இலவசக் கல்வி கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றும் போது இதனை தெரிவித்தார்.

தமிழ் மக்களின் எதிர்காலம் நன்றாக அமையவேண்டும் என்றால் மாணவர்களை பதப்படுத்துகின்ற செயற்பாட்டினை முன்னெடுக்கவேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

### தீர்க்கமான முடிவொன்றை...

தலைமையிலான அரசாங்கத்துடன் முன்னெடுக்கப்பட்ட பேச்சுவார்த்தையின் அடுத்த கட்டம் சம்பந்தமாக கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

நில ஆக்கிரமிப்பு, காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், படுகொலை, அரசியல் கைதிகள் விவகாரம் உள்ளிட்ட விவகாரங்களும் இறுதியாக நடைபெற்ற அதிகாரப்பகிர்வு குறித்த பேச்சுவார்த்தையின் போதும் கூட எவ்வித மான தீர்மானங்களும் எடுக்கப்படவில்லை என சுட்டிக்காட்டியுள்ளார்.

தீர்வு குறித்து நியாயமான அடிப்படையில் இதய சுத்தியுடன் செயற்படுவதாக இருந்தால் ஜனாதிபதி முதலில் தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வு குறித்து முடிவொன்றை எடுத்த பின்னர் தம்மை பேச்சுவார்த்தைக்கு அழைக்க வேண்டும் என்றும் இரா.சம்பந்தன் குறிப்பிட்டுள்ளார்.

முடிவுகள் எடுக்கப்படாது தொடர்ச்சியாக பேச்சுக்களை முன்னெடுப்பதானது காலத்தினை வீணடிக்கும் செயற்பாடாகவே அமையும் என்றும் அவ்விதமான நிலைமைகள் தொடர்ந்தால் உரிய தீர்மானங்களை எடுக்க வேண்டிய நிலை ஏற்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

### தமிழ்த் தேசியக் கட்சிகள்...

மேலும் தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கான நிரந்தர தீர்வு, உடனடிப் பிரச்சினைகளுக்கான தீர்வு ஆகியன தொடர்பாக்கவும் இந்த மாநாட்டின் பொது தீர்மானங்கள் நிறைவேற்றப்படவுள்ளன என்றும் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

அதேநேரம், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமைத்துவத்துக்கான போட்டிக் களத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன், எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரும், சீ.வி.கே.சிவஞானமும் உள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தொடர்ச்சியாக பிற்போடப்பட்டு வரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்சபைக் கூட்டமும் வருடாந்த மாநாடு மற்றும் கட்சிக்குள் தலைமைத்துவத்திற்கான போட்டிகள் குறித்து கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கட்சியின் வட்டாரக்கிளைகள் தெரிவு செய்யும் செயற்பாடுகள், யாழ்ப்பாணம், திருகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு, முல்லைத்தீவு மற்றும் மன்னார் உள்ளிட்ட மாவட்டங்களில் முழுமையடையாத காரணத்தினால் குறித்த பணிகள் பூர்த்தி செய்த பின்னர், கட்சியின் தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் மத்தியகுழு உறுப்பினர்கள் உள்ளிட்ட பதவிநிலைகளுக்கான விண்ணப்பங்களை கோரப்படும் என குறிப்பிட்டுள்ளார்.

### விக்னேஸ்வரனுக்கு இன்னும்...

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கும், வடக்கு - கிழக்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான பேச்சுக்களின் போது சி.வி.விக்னேஸ்வரனால் முன்வைக்கப்பட்ட ஆவணம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அரசமைப்பின் 154 ஹஎல்ஹபிரிவில் இடைக்கால நிர்வாக சபை தொடர்பில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மாகாண சபை நிர்வாகத்தை அரசமைப்புக்கு இயைவாக நடத்த முடியாத சூழல் ஏற்பட்டுள்ளதாக ஜனாதிபதி கருதினால் மாத்திரமே அவ்வாறானதொரு இடைக்கால நிர்வாக சபைக்கான அனுமதியை நாடாளுமன்றில் பெற்று நடைமுறைப்படுத்தலாம்.

போர்க்காலங்களில் கூட அவ்வாறானதொரு ஏற்பாடு நடைமுறையில் இருக்கவில்லை. இப்போது மாகாண நிர்வாகம் அரசமைப்புக்கு ஒத்திசைவாக நடக்கின்றது. அப்படியிருக்கையில் இடைக்கால நிர்வாக சபையை எப்படி அமைக்கலாம்? நீதியரசராக இருந்தவர் விக்னேஸ்வரன். அவருக்குச் சட்டம் தெரியும் என்றுதான் முதலமைச்சராக்கினார்கள்.

ஆனால், முதலமைச்சராகிய சில மாதங்களிலேயே அப்போதைய பிரதம செயலாளர் விஜயலட்சுமி ரமேஸால், முதலமைச்சரின் சுற்றறிக்கைக்கு எதிராக வழக்குத் தொடுக்கப்பட்டது. பின்னர் அந்தச் சுற்றறிக்கையை மீளப்பெற்றார் விக்னேஸ்வரன். அவர் அரசமைப்புத் தெரியாமல் முதலமைச்சராகப் பணியாற்றினார்.

அந்தப் பதவியிலிருந்து விலகிய பின்னரும் அரசமைப்புத் தெரியாமல் இருக்கின்றார். முதலில் அரசமைப்பைப் படித்து தெளிவு பெற்ற பின்னர் அவர் செயற்பட்டால் நல்லது என தெரிவித்துள்ளார்.

### தமிழ்க் கட்சிகள் ஒரு மனதாக...

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கும் தமிழ்க் கட்சிகளுக்கும் இடையிலான சந்திப்பு தொடர்பில் கொழும்பு ஊடகம் எழுப்பிய கேள்விக்கே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் காலமும் பின்தள்ளப்பட்டுக்கொண்டேயிருக்கும் அவர் மேலும் கூறுகையில்,

பேச்சு வெற்றியடைய வேண்டும் என்ற நோக்குடன் தமிழ்க் கட்சிகள் ஜனாதிபதியுடனான சந்திப்பில் பங்கேற்க வேண்டும். அதைவிடுத்து வேண்டா வெறுப்புடன் எதிரணியின் நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் பேச்சு தோல்வியடையும் என்ற எண்ணத்துடன் தமிழ்க் கட்சியினர் பங்கேற்றால் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் காலமும் பின்தள்ளப்பட்டுக்கொண்டேயிருக்கும்.

நான் ஜனாதிபதியாக இருந்த காலத்திலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இரு மன நிலையுடன்தான் பேச்சுக்கு வந்தார்கள். அந்தப் பேச்சுக்கள் துரதிர்ஷ்டவசமாக இடை நடுவில் நின்றுபோயின.

ஜனாதிபதியுடனான தற்போதைய பேச்சு வெற்றியளிக்க வேண்டும் என்பதுதான் ஆளும் கட்சியினராகிய எமது விருப்பம். இதற்கு எம்மாலான அனைத்து ஒத்துழைப்புக்களையும் வழங்குவோம் என தெரிவித்தார்.

### தமிழீழ விடுதலைப் புலிகளுட...

முறுகல்களை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை பல்கலைக்கழக மாணவர்களால் கொள்வனவு செய்யப்பட்ட 1000 உணவுப் பொதிகள் பற்றிய தகவல்கள், கடந்த ஆண்டு ஏற்பட்டதைப் போன்ற ஒரு பெரிய போராட்டத்தின் அச்சத்தைத் தூண்டிய தாகவே பாதுகாப்பு தரப்புக்கள் தெரிவித்திருந்தன.

இதனடிப்படையில் வன்முறையை சமாளிக்க படையினரும் பொலிஸாரும் நடவடிக்கை எடுத்திருந்தனர்.

எனினும் மீண்டு ஒரு போராட்டத்திற்கான சூழ்நிலை இல்லை என்பதால் சுமார் 72 மணி நேரத்திற்குள் பாதுகாப்பு பலப்படுத்தல் படிப்படியாக திரும்பப் பெறப்பட்டது. பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு ஸ்தாபனத்தில் இருப்பவர்கள் உணவு கொள்வனவு அடிப்படையில் மதிப்பீடுகளை மேற்கொள்வது அசாதாரண மானது அல்ல.

பிரிவினைவாதப் போரின் போதும் வடக்கில் உள்ள வெதுப்பகங்களை உளவுத்துறை அதிகாரிகள் கண்காணித்த வரலாறுகள் உள்ளன. அசாதாரண அளவு ரொட்டிகள் தயாரிக்கப்படும் போது அவர்களின் கவனம் தூண்டப்படும்.

இதனால், தாக்குதல் நடக்கலாம் என்ற சந்தேகம் படையினர் மத்தியில் இயல்பாகவே ஏற்பட்டு வந்ததாக பாதுகாப்பு தரப்புக்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### கனேடிய பிரதமர் அறிக்கை...

தெரிவித்துள்ளார். ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தினை குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் மேலும் அவர் தெரிவிக்கையில், கனேடிய பிரதமர் இனவழிப்பு தொடர்பில் ஓர் அறிக்கையை முன்வைத்துள்ளார்.

இனவழிப்பு தொடர்பில் 14 ஆண்டுகள் கடந்தும் ஓர் நாடு அறிக்கை ஒன்றை சமர்ப்பித்துள்ளது என்பது ஆராய்ந்து பார்க்க வேண்டிய விடயமாகும். அதை விடுத்து இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் கனேடிய பிரதமர் விடுத்த அறிக்கைக்கு கண்டனம் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு கனேடிய பிரதமரின் அறிக்கைக்கு கண்டனம் தெரிவிப்பதை விடுத்து எமது மக்களின் பிரச்சினைகளுக்கான நீதியை வழங்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இந்நிலையில் கனேடிய பிரதமர் விடுத்துள்ள அறிக்கையில் கோட்டாபயவிற்கு பாதிப்பு ஏற்பட கூடாது எனும் வகையில் அலி சப்ரி செயற்படுகின்றார் என சுட்டிக்காட்டியுள்ளார்.

### பொறுப்புக்கூறல் விவகாரத்தை...

இதுகுறித்து கருத்து தெரிவிக்கையிலேயே சுமந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் கூறுகையில்,"போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட பின்னரான கடந்த 14 வருடங்களில் அரசாங்கம் பொறுப்புக்கூறலை உறுதிசெய்வதற்கான எந்தவொரு நடவடிக்கையையும் எடுக்காமல் காலந்தாழ்த்திவிட்டு, அதனை ஏனைய சர்வதேச நாடுகள் வலியுறுத்திக் கூறியவுடன் கோபப்படுவதில் அர்த்தமில்லை.

மேலும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான தீர்மானத்தை நிறைவேற்றுவதில் முன்னின்று செயற்பட்ட நாடுகளில் கனடாவும் ஒன்று. கனடா மாத்திரமன்றி ஏனைய சர்வதேச நாடுகளும் இவ்விடயத்தை வலியுறுத்தி வருகின்றன.

எவ்வித முன்னேற்றகரமான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படாத பட்சத்தில் சர்வதேச சமூகம் நிச்சயமாக அழுத்தம் பிரயோகிக்கும்."என தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக இனப்படுகொலை இடம்பெற்றது என்ற உண்மையை கனடா ஏற்றுக் கொண்டமையை வரவேற்பதாக தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலை மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான பொறுப்புக்கூறல் என்பது கடந்த 12 வருடங்களாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்குள்ளேயே முடங்கிப்போயிருப்பதாக சுட்டிக்காட்டினார்.

எனவே, இவ்விடயத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கோ அல்லது சர்வதேச நீதிமன்றத்துக்கோ கொண்டுசெல்வதற்கான தலைமைத்துவத்தை வழங்க கனடா முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

மேலும் இலங்கையில் கடந்த காலங்களில் நடைபெற்று முடிந்த விடயங்கள் தொடர்பில் கனடா கவலையை வெளிப்படுத்தியுள்ளமை ஆறுதலளிக்கின்ற போதிலும், தற்போது நாட்டில் இடம்பெற்றுவரும் கட்டமைப்பு ரீதியான இன அழிப்புக்கு எதிராக கனடா முன்நின்று செயற்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

### ஞாயிற்றுக்கிழமைகளில் யாழ்...

விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மாணவர்கள் தற்போது கைத்தொலைபேசிக்குள் மூழ்கி இருக்கிறார்கள். அதிலிருந்து மாணவர்களை விடுபடவைக்க கலைச் செயற்பாடுகளுக்குள் ஈடுபடுத்த வேண்டும். வாரத்தில் ஒரு நாளாவது மாணவர்களை கலைச் செயற்பாடுகளில் ஈடுபட இடமளிக்கவேண்டும்.

என்னுடைய அடுத்த முயற்சி வாரத்தில் ஒரு நாள் குறிப்பாக ஞாயிற்றுக்கிழமைகளில் தனியார் வகுப்புகளுக்கு விடுமுறை வழங்குவதற்கான செயற்பாடுகளை முன்னெடுப்பதே எனத் தெரிவித்தார்.

## செந்தில் தொண்டமான் : மாகாண முன்னாள் பிரதிநிதிகள் கலந்துரையாடல்!



கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கும் முன்னாள் மாகாண பிரதிநிதிகளுக்குமிடையிலான கலந்துரையாடல் இடம் பெற்றது.

இந்நிலையில் திருகோணமலையில் உள்ள கிழக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்ற குறித்த கலந்துரையாடலில், புன்னான் பல்கலைக்கழகம் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் இருதரப்பு வேலைத் திட்டம் தொடர்பாக கலந்துரையாடியதுடன், கிழக்கு மாகாண மக்களுக்கு மனிதாபிமான நிவாரணங்களையும் வழங்கி வைத்தனர்.

இந் நிகழ்வில் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கபில நுவன் அதுகோரள, பிரதம செயலாளர், மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் ஆகியோருடன் புன்னான் ஆளுநர் வாங் யூபோ, சீனத் தூதுவர் மற்றும் அவர்களது பிரதிநிதிகள் தலைமையிலான குழுவினரகள் பங்கேற்றதாக தெரியவந்துள்ளது.



# இலங்கையில் நடந்த இனப்படுகொலைக்கு காரணமான சிங்கள அரசு தண்டிக்கப்பட வேண்டும்

## மறுமலர்ச்சி தி.மு.கவின் பொதுச் செயலாளர் வைகோ



“இலங்கையில் நடந்த இனப்படுகொலைக்கு காரணமான சிங்கள அரசு தண்டிக்கப்பட வேண்டும்“ என மறுமலர்ச்சி தி.மு.கவின் பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் பெசன்ட் நகர் கடற்கரையில் மே 17 இயக்கத்தின் ஏற்பாட்டில், முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது மேலும் தெரிவித்ததாவது,

“'கனடா பிரதமர் ஜஸ்டின் துரூடோ கடந்த வருடம் கனடா நாடாளுமன்றில் இலங்கையில் நடந்த இனப்படுகொலைக்கு கண்டனம் தெரிவித்து ஒருமனதாக தீர்மானம் ஒன்றினை கனடா நாடாளுமன்றில் நிறைவேற்றினார்கள் அதை இந்த ஆண்டு மே 18ஆம் திகதி அவர் நினைவுப்படுத்தி பேசினார்.

ஆத்திரமுற்ற சிங்கள அரசு கனடா நாட்டு தூதுவரை அழைத்து ‘எங்கள் நாட்டு பிரச்சினையில் நீங்கள் இப்படி தலையிடுக்கின்றீர்கள் என்று தங்களுடைய கண்டனத்தை தெரிவித்தார்கள் ஆனால் கனடா அதற்கு அசைந்து கொடுக்கவில்லை.

எப்படி அல்பேனியாவில் நடந்த படுகொலைக்கு ஜேர்மனிய நாடாளுமன்றில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதோ, அதே போல கனடா நாடாளுமன்றில் இலங்கையில் நடந்த இனப்படுகொலைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது“ என்றார்

ஈழத்தில் நடந்தது இனப்படுகொலையே என கனடா சுட்டிக்காட்டியது போல உலகத்தில் எங்கெல்லாம் தமிழர்கள் வாழ்கின்றார்களோ அங்கெல்லாம் இந்த இனப்படுகொலையை சுட்டிக்காட்டி இந்த படுகொலைக்கு காரணமான சிங்கள அரசுக்கு தண்டனை வழங்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் பொது வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் அது உலகம் முழுவதும் நடத்தப்பட வேண்டும் அதுவே நாம் தீர்வாக வைத்திருக்கின்றோம் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

# ராஜீவ்காந்தி கொலை! விடுதலைப் புலிகளை

## கடுமையாக சாடிய அலிசப்ரி



இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தியை கொலை செய்த பயங்கரவாத அமைப்பை இலங்கை அழித்தது என வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி தெரிவித்துள்ளார்.

தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் தளத்தில் அவர் இதனை பதிவிட்டுள்ளார்.

அந்த பதிவில்,32 வருடங்களிற்கு முன்னர் விடுதலைப்புலிகள், அவர்களின் நிதி திரட்டும் சர்வதேச வலையமைப்பினர், அரசியல் ஆதரவாளர்கள் மற்றும் புலனாய்வாளர்கள் இணைந்து இந்தியாவின் முன்னாள் பிரதமரை கொலை செய்தனர்.

இலங்கை அந்த பயங்கரவாத இயக்கத்தை 14 வருடங்களிற்கு முன்னர் அழித்து, நாட்டில் அமைதி மற்றும் சமதானத்தை ஏற்படுத்தியது என பதிவிட்டுள்ளார்.

ராஜீவ்காந்தி கொல்லப்பட்ட தினத்தை குறிக்கும் வகையில் டுவிட்டரில் அலிசப்ரி இந்த கருத்தினை பதிவு செய்துள்ளார்.

# திருகோணமலையில் சுத்தமான குடிநீர் விநியோக திட்டத்தை ஆரம்பித்து வைத்தார் ஜீவன் தொண்டமான்!



திருகோணமலை பகுதியில் சுத்தமான குடிநீரைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் புல்மோட்டை நிலாவெளி, சம்பல் தீவு மற்றும் ஆனந்த குளம் ஆகிய பகுதிகளை இணைக்கும் குடிநீர் விநியோகத்திற்கான குடிநீர் குழாய் பொருத்தும் நடவடிக்கையை நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டைமானால் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.
67.3 மில்லியனுக்கும் அதிகமான நிதி உதவியின் ஊடாக மேற்கொள்ளப்படும் இத்திட்டம் 28 கிலோ மீற்றர் பரப்பைக் கொண்டதாகும்.

இந்த திட்டம் நிறைவடைந்தவுடன் 300ற்கும் அதிகமான புதிய குடிநீர் இணைப்புகள் வழங்கப்படுவதுடன், திருகோணமலை நகரம் மற்றும் அதை அண்டியுள்ள கிராமப் பகுதிகளுக்குத் தடையின்றி குடிநீர் வழங்குவதற்காகவே இத்திட்டம் மேற்கொள்ளப்படுகின்றது.

இதேவேளை, திருகோணமலை, கந்தளாய் ஆகிய நகரங்கள் மற்றும் அதனை அண்டிய பகுதிகளுக்குக் குடிநீர் வழங்கும் கந்தளாய் நீர் சுத்திகரிப்பு நிலையத்தை விஸ்தரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்துக்கு கண்காணிப்பு பயணமொன்றை மேற்கொண்டிருந்த அமைச்சர் ஜீவன் தொண்டைமான், கந்தளாய் நீர் சுத்திகரிப்பு நிலையத்தை பார்வையிட்டதுடன், அதிகாரிகளுடனும் கலந்துரையாடியுள்ளார்.

தற்போதைய நிலவரம் மற்றும் விஸ்தரிப்புக்கான தேவைப்பாடுகள் பற்றியும் கேட்டறிந்து கொண்டார்.

இந்நிகழ்வில் அமைச்சர் உட்பட நாடாளுமன்ற உறுப்பினர்களான மருத பாண்டி ராமேஷ்வரன், கபில அத்துகோரல, தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையின் பிரதி தலைவர் சஞ்சீவ விஜேகோன், தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையின் கிழக்கு மாகாணத்திற்கான பிரதி பொது முகாமையாளர் எம்.எம்.நசீல், உதவி பொது முகாமையாளர் டீ.ஏ. பிரகாஷ், பிராந்திய முகாமையாளர் பீ.சுதாகரன், பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் தலைவர் பாரத் அருள்சாமி, தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையின் அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# முறக்கொட்டாஞ்சேனை இராணுவ முகாம் தனியார் காணிகளை விடுவிக்க நடவடிக்கை!



மட்டக்களப்பு - ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட முறக்கொட்டாஞ்சேனையில் உள்ள இராணுவ முகாமில் உள்ள தனியாரின் காணிகளை விடுவிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் ஜனாதிபதியுடன் நடைபெற்ற கலந்துரையாடலின் போது தான் விடுத்த வேண்டுகோளின் அடிப்படையில் குறித்த காணிகளை விடுவிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

முறக்கொட்டாஞ்சேனை பகுதிக்கு நேற்று மாலை (21.05.2023) சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராணுவமுகாம் உள்ள பகுதிக்குள் உள்ள தனியார் காணி உரிமையாளர்களை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.